தினமலர்

**மாநில அளவில் கரும்பு அபிவிருத்தியில் சாதனை மூங்கில்துறைப்பட்டு சர்க்கரை ஆலைக்கு விருது**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 28,2010,00:25 IST

சங்கராபுரம் : தமிழக அளவில் கரும்பு அபிவிருத்திக் காக மூங்கில்துறைப்பட்டு சர்க்கரை ஆலைக்கு விருது வழங்கப்பட்டுள்ளது.

சங்கராபுரம் அடுத்த மூங்கில்துறைப்பட்டு சர்க்கரை ஆலையில் 2010.11 ம் ஆண்டு கரும்பு அறவை பருவம் அடுத்த மாதம் முதல் வாரத்தில் துவங்க உள்ளது. இதன் முன்னோடியாக கொதிகலன் இளஞ்சூடேற்று விழா நேற்று முன் தினம் நடந்தது. நிகழ்ச்சியில் ஆலையின் தனி அலுவலர் வளர்மதி தலைமை தாங்கி பேசியதாவது:

தென்னிந்திய கரும்பு மற்றும் சர்க்கரை தொழில் நுட்ப வல்லுனர்கள் சங்கத்தால் 2009-10ம் ஆண்டிற்கு தமிழகத்தில் உள்ள அனைத்து சர்க்கரை ஆலைகளிலும் மூங்கில்துறைப்பட்டு சர்க்கரை ஆலை சிறந்து விளங்குகிறது. நமது ஆலை கரும்பு அபிவிருத்திக்காக முதல் பரிசுக்கு தேர்வு செய்யப்பட்டு விருது வழங்கப்பட்டுள்ளது. இதற்கு காரணமாக இருந்த ஆலை அங்கத்தினர்கள், அதிகாரிகள் மற்றும் அலுவலர்களுக்கு நன்றியையும், பாராட்டுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும் இந்தாண்டு 5.75 லட்சம் டன் கரும்பு உற்பத்தி செய்துள்ளது. நமது ஆலையில் 4.30 லட்சம் டன் கரும்பு அறவை செய்யப்படும், மீதியை இதர ஆலைகளுக்கு அனுப்ப ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது. ஆலையின் அறவைக்கு சுத்தமான கரும்பை அங்கத்தினர்கள் சப்ளை செய்ய கேட்டுக் கொள் ளப்படுகின்றனர். இதனால் சர்க்கரை கட்டுமானம் கூடுதலாக கிடைக்க வாய்ப்புள்ளது. மேலும் செம்மை கரும்பு சாகுபடி திட்டத்தின் கீழ் விவசாயிகள் கரும்பு நடவு செய்து கூடுதல் மகசூல் பெற கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

இவ்வாறு ஆலை தனிஅலுவலர் வளர்மதி பேசினார். நிகழ்ச்சியில் தலைமை கரும்பு அலுவலர் ராஜேந்திரன் மற்றும் விவசாய சங்க பிரதிநிதிகள், கரும்பு விவசாயிகள், வாகன உரிமையாளர்கள், ஆலையின் அதிகாரிகள், தொழிலாளர்கள் கலந்து கொண்டனர்.

**மீன் வளர்ப்பு பயிற்சி முகாம்**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 28,2010,01:37 IST

தம்மம்பட்டி: தமிழ்நாடு வனத்துறை மற்றும் மீன்வளத்துறை இணைந்து வனக்குழுவினருக்கு மீன்வளர்ப்பு பயிற்சி முகாம் தம்மம்பட்டி வனச்சரக அலுவலக வளாகத்தில் நடந்தது. தமிழகத்தில் மத்திய அரசின் வேளாண்மை அபிவிருத்தி திட்டத்தின் கீழ் வனப்பகுதி தடுப்பணை, கசிவு நீர் குட்டை ஆகிய நீர்நிலைகளில் 20 ஹெக்டேர் நீர்பரப்பளவில் இலவசமாக மீன் குஞ்சு இருப்பு செய்து, அறுவடை செய்யப்படுகிறது. அவ்வாறு வளர்ந்து காணப்படும் மீன்களை வனக்குழு உறுப்பினர்களுக்கு ஒரு ஹெக்டேருக்கு கட்லா, ரோகு, மிர்கால், வெள்ளி கெண்டை, கெண்டை உள்ளிட்ட மீன்கள் வழங்கப்படவுள்ளன. ஹெக்டேருக்கு 1,000 மீன் குஞ்சுகள் வீதம் 20 ஆயிரம் மீன் குஞ்சுகள் முதற்கட்டமாக சப்ளை செய்து வரும் அக்டோபர், நவம்பர் மற்றும் டிசம்பர் மாதங்களில் மீன்குஞ்சுகள் நீர்நிலைகளில் இருப்பு செய்யப்பட உள்ளது. பின், ஐந்து மாதங்கள் கடந்து, வளர்ந்து காணப்படும் மீன்களை அறுவடை செய்து வனக்குழுவினருக்கு வழங்கப்படுகிறது. தமிழகத்தில் சேலம், வேலூர், தேனி மற்றும் கன்னியாகுமாரி ஆகிய நான்கு மாவட்டங்களில் முதல்கட்டமாக வனத்துறை மூலம் மீன்வளர்க்கும் திட்டம் அறிமுகப்படுத்தப்பட உள்ளது. சேலம் மாவட்டத்தில் ஆத்தூர் வனக்கோட்டம் தம்மம்பட்டி வனச்சரகத்துக்குட்பட்ட வனக்குழுவை சேர்ந்த 60 பயனாளிகளுக்கு தம்மம்பட்டி வனச்சரக அலுவலக வளாகத்தில் தடுப்பணை பகுதியில் மீன்கள் வளர்ப்பது குறித்து பயிற்சி முகாம் நடந்தது. சென்னை மீன்வளத்துறை பணி பயிற்சி நிலையத்தின் சிறப்பு நிலை ஆராச்சியாளர் சிதம்பரம்பிள்ளை பயிற்சி அளித்தார். முகாமில் சென்னை மீவளத்துறை பொறியாளர் கிருஷ்ணகுமார், மேட்டூர் மீன்துறை அலுவலர் வெங்கடாஜலம், சேலம் மீன்துறை அலுவலர் தென்னவன், யுவராஜ், ஆத்தூர் வனகோட்ட அலுவலர் நாகநாதன், வனச்சரகர் ராஜலிங்கம் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

**இயந்திரங்கள் வரத்து, ஆட்கள் பற்றாக்குறை : விடை பெறும் நிலையில் வேளாண் கருவிகள்**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 26,2010,02:51 IST

மேட்டூர்: மாற்று தொழில் செல்லும் விவசாய கூலியாட்கள், இயந்திரங்கள் வரத்து காரணமாக காலம் காலமாக விவசாயிகள் பயன்படுத்திய வேளாண் கருவிகள் விற்பனை குறைந்து, விரைவில் விடைபெறும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது.

ஆண்டுதோறும் தென்மேற்கு, வடகிழக்கு பருவமழை காலத்தில் தமிழகத்தில் விவசாயிகள் பயிர் சாகுபடியை துவங்குவர். அதற்காக நிலத்தை சீர் செய்ய மம்பட்டி, கலப்பை, கத்தி, அரிவாள் போன்ற வேளாண் கருவிகளை வாங்குவது வழக்கம். சாகுபடி சமயத்தில் வேளாண் கருவிகள் விற்பனை அதிகமாக இருக்கும் என்பதால், வியாபாரிகள் பலர் கிராம சந்தைகளில் வேளாண் கருவிகளை விற்பனை செய்வர். சமீபகாலமாக சந்தைகளில் வேளாண் கருவிகள் விற்பனை வெகுவாக குறைந்து விட்டது வியாபாரிகளை வேதனையில் ஆழ்த்தியுள்ளது.
ஜலகண்டபுரத்தில் வேளாண் கருவிகள் விற்பனை செய்யும் வியாபாரிகள் கூறியதாவது: முன்பு தென்மேற்கு அல்லது வடகிழக்கு பருவமழை சீஸனில் மம்பட்டி, அரிவாள், களைவெட்டி, ஏர் கலப்பை போன்றவற்றை விவசாயிகள் அதிக அளவில் வாங்கி செல்வர். சமீபகாலமாக ஏர் உழுவதற்கு, களை எடுப்பதற்கு, நாற்று நடுவதற்கு என தனித்தனியாக இயந்திரங்கள் வந்து விட்டன.
தவிர, விவசாய தொழிலாளர்கள் பலர் மாற்று வேலைக்கு சென்று விட்டனர். விவசாய தொழிலாளர்கள் காலம் காலமாக பயன்படுத்திய மம்பட்டி, கலப்பைகளின் உபயோகம் படிப்படியாக குறைந்து வருகிறது. அதற்கேற்ப விற்பனையும் மூன்றில் ஒரு பங்காக குறைந்து விட்டது. நாங்கள் பல தலைமுறையாக வேளாண் கருவிகளை விற்பனை செய்கிறோம். ஆண்டுதோறும் கருவிகள் விற்பனை குறைந்து கொண்டே வருவதால், எங்கள் வாரிசுகள் மாற்று தொழிலுக்கு சென்று விட்டனர். வரும் காலத்தில் பழமையான வேளாண் கருவிகள் விற்பனை மேலும் குறையும், என்றனர்.

**மழையால் ஆரஞ்ச் பழ விற்பனை மந்தம்: தர்மபுரி வியாபாரிகள் கலக்கம்**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 28,2010,01:39 IST

தர்மபுரி: தர்மபுரியில் தொடர் மழை காரணமாக விற்பனை ஆகாமல் ஆரஞ்ச் பழங்கள் அழுகி குப்பையில் வீசப்பட்டது., தர்மபுரியில் கடந்த 10 நாட்களுக்கு மேலாக தொடர் மழை பெய்து வருகிறது. மழை காரணமாக குளிர் வகை பழங்கள் விற்பனை மந்தம் ஏற்பட்டுள்ளது. குறிப்பாக ஆரஞ்ச் பழங்கள் அதிக அளவில் ஏற்காடு மற்றும் பெங்களூரு பகுதியில் இருந்து விற்பனைக்கு வந்தன. விற்பனைக்கு வந்த பழங்கள் மழை காரணமாக விற்பனை ஆகாமல் வியாபாரிகளிடம் தேங்கியது.

விற்பனை மந்தம் காரணமாக கடந்த வாரம் 40 ரூபாய்க்கு விற்பனையான பழங்கள் கிலோ 15 முதல் 20 ரூபாய் வரைக்கு விற்பனை செய்யப்பட்டும் வாங்க ஆட்கள் வரவில்லை. இதனால், தர்மபுரி பழச்சந்தைகளில் பல கடைகளில் ஆரஞ்ச் பழங்கள் அழுகி விற்பனை செய்ய முடியாமல் போன பழங்கள் ராமக்காள் ஏரி உள்ளிட்ட நகரின் வெளிப்பகுதியில் மூட்டை, மூட்டையாக

கொட்டப்பட்டு வருகிறது. இன்னும் சிலர் ஆரஞ்ச் ஜூஸ் 10 முதல் 15 ரூபாய்க்கு விற்பனை செய்ய துவங்கியுள்ளனர். இருப்பினும் மழையால் ஆரஞ்ச் பழங்களை வாடிக்கையாளர்கள் வாங்க தயக்கம் காட்டி வருகின்றனர்.

**கரும்பு பயிரில் வேர் புழு தாக்குதல் இழப்பீடு வழங்க குறைதீர் கூட்டத்தில் விவசாயிகள் கோரிக்கை**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 26,2010,03:21 IST

கிருஷ்ணகிரி: "கிருஷ்ணகிரி மாவட்டத்தில் வேர் புழு தாக்குதலால் பாதிக்கப்பட்டுள்ள கரும்பு விவசாயிகளுக்கு இழப்பீடு தொகை வழங்கிட வேண்டும்' என குறைதீர் கூட்டத்தில் விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.
கிருஷ்ணகிரி மாவட்ட விவசாயிகள் குறைதீர் கூட்டம் கலெக்டர் அலுவலகத்தில் கலெக்டர் அருண்ராய் தலைமையில் நடந்தது. டி.ஆர்.ஓ., பிரபாகர், வேளான் உதவி இயக்குனர் ராஜன், கலெக்டரின் நேர்முக உதவியாளர் (வேளாண்) நாச்சியப்பன், வேளாண் அலுவலர் பச்சையப்பன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். கூட்டத்தில் நடந்த விவாதம் வருமாறு:
கண்ணு (மாவட்ட செயலாளர், தமிழ்நாடு விவசாயிகள் சங்கம்): கிருஷ்ணகிரி மாவட்டத்தில் விவசாயிகள் கால்நடை வளர்ப்பை துணை தொழிலாக கொண்டுள்ளதால் வனப்பகுதிகளில் கால்நடைகளை குறிப்பாக ஆடுகளை பட்டி போட்டு மேய விட வனத்துறையினர் அனுமதி வழங்க வேண்டும்.
டி.ஆர்.ஓ., பிரபாகர்: வனப்பகுதிகளில் வெள்ளாடுகளை தவிர மற்ற கால்நடைகளை மேய விட வனத்துறையினர் அனுமதி வழங்கி வருகின்றனர். வனப்பகுதியில் பட்டி போட்டு கால்நடைகளை குறிப்பாக ஆடுகளை மேய விட அனுமதி வழங்க முடியாது.
சக்கரவர்த்தி: நெடுங்கல் அணைகட்டில் இருந்து பாரூர் ஏரிக்கு தண்ணீர் செல்லும் பிரதான கால்வாயில் 140க்கும் மேற்பட்ட இடங்களில் ஆயில் இன்ஜின் கொண்டு தண்ணீர் இறைக்கப்படுவதால், பாரூர் ஏரி பாசனம் மற்றும் திருவணப்பட்டி, புலியூர் ஏரி பாசன கடைமடை விவசாயிகளுக்கு தண்ணீர் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. இதனை பொதுப்பணித்துறையினர் தடுத்து நிறுத்த வேண்டும்.
டி.ஆர்.ஓ., பிரபாகர்: பொதுப்பணித்துறையினர் கால்வாய் நெடுகிலும் கண்காணிப்பு பணியை மேற்கொண்டு கால்வாயில் வைத்துள்ள ஆயில் இன்ஜின்களை பறிமுதல் செய்யப்படும். இதற்கு அந்தந்த பகுதி விவசாயிகள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.
கிருஷ்ணன்: கிருஷ்ணகிரி மாவட்டத்தில் குறிப்பாக காவேரிப்பட்டணம் சுற்றுவட்டார பகுதியில் சுமார் 300 ஏக்கரில் சாகுபடி செய்துள்ள கரும்பு பயிரில் தற்போது அறுவடைக்கு தயாராக

இருக்கும் நிலையில் வேர் புழுக்கள் தாக்குதல் அதிகஅளவில் ஏற்பட்டுள்ளது. இதனால் கரும்பு பயிர் கடுமையாக சேதமடைந்துள்ளது. சேதமடைந்த விவசாயிகளுக்கு பாலக்கோடு கூட்டுறவு சர்க்கரை ஆலை மூலம் இழப்பீட்டு தொகை வழங்க வேண்டும்.

கலெக்டர் அருண்ராய்: வேர் புழு தாக்குதல் குறித்து வேளாண் துறை மூலம் சர்வே செய்யப்படும். மேலும் காலதாமதம் செய்யாமல் பதிவு செய்துள்ள விவசாயிகளுக்கு உடனடியாக கரும்பு வெட்ட ஆர்டர் வழங்கப்படும். நோய் தாக்குதலால் அதிகமாக பாதிக்கப்பட்டுள்ள விவசாயிகளுக்கு சர்க்கரை ஆலை மூலம் இழப்பீட்டு தொகை வழங்க நடவடிக்கை எடுக்க அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்படும்.

ராமகவுண்டர்: தென்பெண்ணை ஆற்றின் குறுக்கே கும்மனூர்- ஒம்பலக்கட்டு இடையே பாலம் இல்லாததால் விவசாயிகள் 15 கி.மீ., சுற்றி வந்து விவசாயம் செய்யும் நிலை உள்ளது. உடனடியாக அந்த பகுதியில் தரைப்பாலம் கட்ட வேண்டும்.

கலெக்டர் அருண்ராய்: வரும் நிதியாண்டில் நபார்டு வங்கி மூலம் அந்த பகுதியல் பாலம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும். இவ்வாறு விவாதம் நடந்தது.

**வெண்டையில் பூச்சி தாக்குதல்; சீஸன் காலத்தில் அறுவடை பாதிப்பு**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 28,2010,01:50 IST

கோபிசெட்டிபாளையம்: கோபி வட்டாரத்தில் வெண்டைக்காயில் ஏற்பட்டுள்ள பூச்சித் தாக்குதலால் சாகுபடி குறைந்துள்ளது. திருமண சீஸன் காலத்தில் வெண்டை அறுவடை பாதிக்கப்பட்டுள்ளதால் விவசாயிகள் பெரும் கவலையில் உள்ளனர். வெப்ப மண்டலக் காய்கறிப் பயிரான வெண்டைக்காய், மார்ச், மே மற்றும் ஜூன் மாதங்களில் அதிகளவில் பயிரிடப்படும். உணவில் அதிகம் பயன்படுத்தப்படும் வெண்டைக்காயில் வைட்டமின் "ஏ' மற்றும் "சி' சத்துக்கள், புரதம் மற்றும் தாது உப்புகள் அதிகம் உள்ளது. "ரிபோபிளேவின்' எனப்படும், "பி12' வைட்டமின் உள்ளதால். வெண்டைக்காயை சாப்பிடுவர்களுக்கு பசியின்மை, எடை குறைதல், வாய்ப்புண் ஆகியவை ஏற்படாது. மிகவும் குறைந்த காலம் மற்றும் குறைந்த நீர்வளத்தில் அதிக மகசூலை தரக்கூடிய வெண்டைக்காயை, கோபி வட்டார விவசாயிகள் அதிகளவில் பயிரிடுகின்றனர். சிறுவலூர், கொளப்பலூர், பொலவகாளிப்பாளையம், கடுக்காம்பாளையம், குள்ளம்பாளையம், கள்ளிப்பட்டி, குருமந்தூர், கடத்தூர், கொங்கர்பாளையம் ஆகிய பகுதிகளில் வெண்டைக்காய் சாகுபடி அதிகம். ஜூன் மாதம் சாகுபடி செய்யப்பட்ட வெண்டைக்காய் செடிகளில் வெள்ளை ஈக்கள் மற்றும் வண்டு தாக்குதல் தென்படுகிறது. இதனால், விவசாயிகள் வெண்டைக்காயை குறிப்பிட்ட காலத்துக்குள் அறுவடை செய்யாமல், அடுத்த பருவத்துக்கு தேவைப்படும் என, விதையாக வளர்த்து வருகின்றனர். விவசாயிகள் கூறியதாவது: திருமண சீஸனை மனதில்

கொண்டு வெண்டைக்காயை அதிகளவில் பயிரிடுவோம். நடப்பு சீஸனில் பருவமழை தவறியதால் வெண்டை சாகுபடி குறைந்தது. கோபி பகுதியில் தொடர்ந்து 10 நாட்களாக மழை பெய்து வருவதால், வெண்டைக்காய் அதிகளவில் உற்பத்தி இருக்கும் என எதிர்பார்த்தோம். மழை பெய்ததால் மாவுப்பூச்சி தாக்குதல் குறைந்திருந்தது. ஆனால், வேறு வகையான பூச்சி மற்றும் வண்டு தாக்குதலால், வெண்டைக்காய் பிஞ்சிலேயே முற்றி விடுகிறது. 45 நாட்களுக்கு பிறகு முற்றும் வெண்டைக்காய், பூச்சி தாக்குதலால் 20 நாட்களிலேயே சரிவர வளராமல் முற்றி விடுகிறது. இலைகளும் உதிர்ந்து விட்டன. பூச்சிக் கொல்லி மருந்துகள் அடித்தும் பயனில்லை. சராசரியாக ஒரு ஏக்கருக்கு 10 முதல் 15 டன் வரை வெண்டைக்காய் மகசூல் கிடைக்கும். பூச்சி தாக்குதலால் ஐந்து முதல் எட்டு டன் வரை கூட மகசூல் கிடைப்பது கடினம்தான். சரிவர வளராத நிலையில் முற்றிவிட்ட வெண்டைக்காயை சமையலுக்கு பயன்படுத்த முடியாது. இதனால், விதைக்காக செடியில் விடுவதைத் தவிர வேறு வழியில்லை. இவ்வாறு அவர்கள் தெரிவித்தனர்.

"சி.ஆர்.1009' விதை நெல் தேவையான அளவு வழங்க எம்.எல்.ஏ., வேண்டுகோள்

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 27,2010,02:01 IST

திருத்துறைப்பூண்டி: "காவிரி டெல்டா மாவட்டத்துக்கு தேவையான சம்பா விதை நெல் சி.ஆர்.1009 வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென' வேளாண் துறை அமைச்சருக்கு எம்.எல்.ஏ., உலகநாதன் கோரிக்கை தெரிவித்துள்ளார்.

அமைச்சருக்கு எழுதிய கடிதத்தில் கூறியதாவது: காவிரி டெல்டா மாவட்டத்துக்கு மேட்டூர் அணையில் போதிய தண்ணீர் இல்லாத காரணத்தால் ஜூலை 28ம் தேதி தண்ணீர் திறக்கப்பட்டது. காலத்தில் தண்ணீர் திறக்கப்படாததால் குறுவை சாகுபடியும் இல்லை. நேரடி விதைப்புக்கு உழுது, விதை தெளிக்க மழை இல்லாததால் கையில் இருந்த விதையையும் தெளித்து விவசாயிகள் பெரும் சிரமத்துக்கு தள்ளப்பட்டுள்ளனர். தற்போது, காவிரி டெல்டா கடைமடைப்பகுதிகளில் நல்ல மழை பெய்துள்ளதால் அதை பயன்படுத்தி விதைவிட்டு சம்பா சாகுபடி துவக்கலாம் என்ற எண்ணத்தில் வேளாண் துறையின் கீழ் செயல்படும் வேளாண் துறை விதை விற்பனை மையங்களில் விதை நெல் கேட்டுச் செல்லும் விவசாயிகள் பெரும் ஏமாற்றத்துடன் திரும்புகின்றனர்.

காவிரி டெல்டா கடைமடைப்பகுதி தொடர்ந்து மழை, வெள்ளம் போன்ற இயற்கை பாதிப்புக்கள் ஏற்படும் பகுதி. இப்பகுதியில் இயற்கை பாதிப்புக்களில் இருந்து பயிர்களை பாதுகாக்க சி.ஆர்.1009 நெல் ரகத்தை தேர்வு செய்து விவசாயிகள் சாகுபடி செய்து வருகின்றனர். தண்ணீரில்

பயிர்கள் மூழ்கி இருந்தாலும் பெரும் பாதிப்பு இல்லாமல் இந்நெல் ரகம் விவசாயிகளை பாதுகாத்து வருகிறது. ஆனால், வேளாண் விற்பனை மையங்களில் சி.ஆர்.1009 விதை நெல் இல்லை. எனவே, அமைச்சர் தலையிட்டு டெல்டா மாவட்ட விவசாயிகள் பயன்பெறும் வகையில் சி.ஆர்.1009 விதை நெல் கிடைத்திட ஆவண செய்ய வேண்டும்.

**பயிர் காப்பீட்டு திட்டங்களில் வங்கிகளுக்கு ஆர்வமில்லை**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 27,2010,22:36 IST

தேனி : விவசாயிகளுக்கான பயிர் காப்பீட்டு திட்டங்களில் தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகள் ஆர்வம் காட்டாத நிலை உள்ளது.

தேசிய விவசாய பயிர் காப்பீட்டு திட்டத்தின் கீழ் நெல், கம்பு, மக்காச்சோளம், கடலை, பருத்தி, வெங்காயம், வாழை போன்ற விவசாய பயிர்களுக்கு இயற்கை இடர்பாடுகள், நோய் போன்றவற்றால் பாதிப்பு ஏற்பட்டால் அதில் இருந்து விவசாயிகளை பாதுகாப்பதற்காக காப்பீட்டு திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ் கடன் வாங்கும் விவசாயிகளுக்கு பயிர் காப்பீடு செய்யப்படுகிறது. இதில் தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகள் ஆர்வம் காட்டுவதில்லை. பயிர் காப்பீட்டு திட்ட பிரிமியம் வசூலிப்பதில் அதிக லாபம் எதிர்பார்க்க முடியாது என்பதாலும், வேலைப்பளு அதிகம் என்பதாலும் இத்திட்டத்தை செயல்படுத்த தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளில் எந்த ஆர்வமும் இல்லை. கடந்த ஆண்டில் இத்திட்டத்தில் கடலூர், நாகை, கன்னியாகுமரி போன்ற ஒரு சில மாவட்டங்களை தவிர பெரும்பாலான மாவட்டங்களில் எந்த பிரிமியமும் வசூலிக்கப்படவில்லை. வங்கியாளர்கள் கூட்டங்களில் மாவட்ட கலெக்டர்கள் எவ்வளவுதான் இதை வலியுறுத்தி பேசினாலும் அதை அவர்கள் கண்டு கொள்வதே இல்லை. பயிர் காப்பீட்டு திட்டங்களை கூட்டுறவு வங்கிகள் மட்டுமே செயல்படுத்தி வருகின்றன. தற்போது புதிதாக கொண்டுவரப்பட்டுள் தென்னை பயிர் காப்பீட்டு திட்டத்திலாவது பங்கேற்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

**கால்நடை வளர்ப்பு பயிற்சி**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 27,2010,22:39 IST

தேனி : போடி அருகே சிலமலையில் நபார்டு வங்கி, அம்மாபட்டி வாய்ஸ் சுற்றுச்சூழல் நிறுவனம் இணைந்து மகளிர் சுய உதவிக்குழுவினருக்கு கால்நடை வளர்ப்பு பயிற்சி அளித்தனர்.

ஊராட்சி தலைவர் மனோன்மணி தலைமை வகித்தார். வாய்ஸ் நிறுவன செயலாளர் அன்பழகன் வரவேற்றார். நபார்டு வங்கி உதவி பொதுமேலாளர் மணி துவக்கி வைத்தார். தேனி இந்தியன் ஓவர்சீஸ் வங்கி முதுநிலை மேலாளர் அனந்தகிருஷ் ணன், வங்கி விவசாய அலுவலர் தியாகு, வாய்ஸ் நிறுவன பயிற்சியாளர் ரவுத் தையா, ராசிங்காபுரம் வுமன்ஸ் வெல்பர் சொசைட்டி செயலாளர் லதா பேசினர்.

**திராட்சை விவசாயிகள் பிரச்னை ஆர்.டி.ஓ., ஆலோசனையில் தீர்வு**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 27,2010,22:36 IST

கம்பம் : திராட்சை விவசாயிகளுக்கும், வியாபாரிகளுக் கும் இடையே ஏற்பட்ட பிரச்னை தொடர்பாக ஆர்.டி.ஓ., முன்னிலையில் நடந்த கூட்டத்தில் உடன்பாடு ஏற்பட்டது.
திராட்டை பழங்களை மனு கணக்கில் கொள்முதல் செய்து வந்தனர். இதை விவசாயிகள் ஏற்கவில்லை. கிலோ கணக்கில் தான் கொள்முதல் செய்யவேண்டும் என்று வலியுறுத்தி வந்தனர். இதுதொடர்பாக உத்தமபாளையம் கோட்டாட்சியர் அலுவலகத்தில் ஆர்.டி.ஓ., மோகனதாஸ், கலெக்டரின் நேர்முக உதவியாளர் (விவசாயம்) ராமகிருஷ்ணன் ஆகியோர் தலைமையில் விவசாயிகள், வியாபாரிகள் கலந்து கொண்ட ஆலோசனை கூட்டம் நடந்தது.
திராட்சை விவசாயிகள் சங்க தலைவர் செல்வக்குமார், செயலாளர் நந்தகுமார், பொருளாளர் இருளாண்டி, வியபாரிகள் சங்க தலைவர் தெய்வேந்திரன், செயலாளர் தங்கம், பொருளாளர் பழனிச்சாமி ஆகியோர் கலந்து கொண்டனர்.
கிலோ கணக்கில் திராட்சை கொள்முதல் செய்யப்பட வேண்டும். கிலோவிற்கு வெட்டுக்கூலியாக விவசாயிகளிடம் இருந்து 40 பைசா வியாபாரிகள் பெற்றுக்கொள்ள வேண்டும். அன்றாடம் கொள்முதல் செய்யும் பழங்கள் அளவு, விலை பற்றி வியாபாரிகள் சிட்டை தர வேண்டும். இந்த மூன்று முடிவுகளை இருதரப்பினரும் ஏற்றுக் கொண்டனர்.

**"வர்ஷ பீமா' பயிர் காப்பீடு திட்டம் : விவசாயிகள் கவனத்திற்கு**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 27,2010,22:17 IST

சிவகங்கை : இந்திய விவசாய காப்பீடு நிறுவன மண்டல மேலாளர் சி.அன்பரசு அறிக்கை: விவசாயிகளுக்கான "வர்ஷ பீமா' திட்டம் நடப்பு ஆண்டும் அறிவிக்கப்பட்டுள்ளது. மதுரை,

ராமநாதபுரம், சிவகங்கை, புதுக்கோட்டை மாவட்ட சம்பா நெல், மிளகாய் விவசாயிகள் இதில் பயன் பெறலாம். ஒவ்வொரு ஒன்றியத்திலும் கடந்த 15 அல்லது 25 ஆண்டு மழை அளவை பொறுத்து, பயிர் வளர்ச்சிக்கு ஏற்ப இழப்பீடு கணக்கிடப்படும். இதில் சேர விவசாயிகள் வங்கி கணக்கு துவக்க வேண்டும்.
காப்பீடு நிறுவன ஏஜன்ட் இதற்கு உதவி செய்வார். பிரீமிய தொகையை "டிடி'யாக அனுப்ப வேண்டும். மொத்த காப்பீடு மதிப்பு, ஒரு ஏக்கர் நெல்லுக்கு 6,000 ரூபாய்; மிளகாய்க்கு 10,000. முன்மொழிவு படிவத்துடன் சிட்டா, அடங்கல் இணைக்க வேண்டும். AIC of India Ltd, Axis Bank A/c No : 006010200018027" என்ற பெயருக்கு "டிடி' எடுத்து, "விவசாய காப்பீடு நிறுவனம், 156/ 323- ஆந்திரா இன்ஸ்சூரன்ஸ் பில்டிங், முதல்தளம், தம்பு செட்டிதெரு, பாரிமுனை, சென்னை -01' என்ற முகவரிக்கு அனுப்பவும். "044 - 420 513 49, 420 513 50, 420 533 03' என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம்.
ஒன்றியம் வாரியாக விவசாயிகள் செலுத்த வேண்டிய பிரீமிய தொகை விபரம் (ஒரு ஏக்கர்): நெல், மிளகாய் பயிர்: எஸ்.புதூர்: நெல் -585, மிளகாய் 717; திருப்புவனம்- 474, 882; காளையார்கோவில், கல்லல்- 540, 772; இளையான்குடி- 441, 662 ரூபாய். நெல் மட்டும்: திருப்புத் தூர்- 441, சிங்கம்புணரி - 640, சாக்கோட்டை - 441, தேவகோட்டை, கண்ணங்குடி - 441, சிவகங்கை - 518, மானாமதுரை - 485. செப்., 15ம் தேதிக்குள் திட்டத்தில் சேர வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

**மானிய விலையில்வேளாண் கருவிகள்**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 26,2010,23:12 IST

சிங்கம்புணரி:எஸ்.புதூர் ஒன்றிய விவசாயிகளுக்கு மானிய விலையில் வேளாண் கருவிகள் வழங்கப்படுகின்றன. பவர் டில்லருக்கு, 45 ஆயிரம் ரூபாய்; ரேவிட்டா வீட்டர் கருவிக்கு, 30 ஆயிரம் ரூபாய்; மின்சார பம்ப் செட், 10 ஆயிரம்; விதை விதைக் கும் கருவி, 2,500; கோனா வீட்டர், மார்கன் கருவிகள் 50 சதவீத மானியத்திலும் வழங்கப்படும். விவசாயிகள் எஸ்.புதூர் வேளாண் வளர்ச்சி மையத்தை, அணுகுமாறு, உதவி இயக்குனர் மணிவண்ணன் தெரிவித்தார்.

# சீனாவில் உற்பத்தி குறைந்ததால் நாட்டின் பூண்டு ஏற்றுமதி 10,975 டன்னாக உயர்வு



இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு

கொச்சி

நடப்பு நிதி ஆண்டில் (2010–11) ஏப்ரல் முதல் ஜூலை வரையிலான நான்கு மாத காலத்தில், நாட்டின் பூண்டு ஏற்றுமதி 10,975 டன்னாக அதிகரித்துள்ளது. மதிப்பின் அடிப்படையில் இது ரூ.41.30 கோடியாகும். சென்ற நிதி ஆண்டின் இதே காலத்துடன் ஒப்பிடும்போது, இது அளவின் அடிப்படையில் 1,184 சதவீதமும், மதிப்பின் அடிப்படையில் 1,957 சதவீதமும் அதிகமாகும்.

சீனா முதலிடம்

உலக அளவில், பூண்டு உற்பத்தியில் சீனா முதலிடத்தில் உள்ளது. இவ்வாண்டில், சீனாவில் பூண்டு உற்பத்தி குறைந்துள்ளது. மேலும், சர்வதேச சந்தையில் இந்திய பூண்டின் விலை ஒரு டன் சுமார் 2,000 டாலர் என்ற அளவில் உள்ளது. அதேசமயம், சீன பூண்டின் விலை 2,600–3,200 டாலராக உள்ளது. இதன் காரணமாக, பல சர்வதேச நாடுகள் சீன நாட்டின் பூண்டிற்கு பதிலாக, இந்தியாவின் பூண்டை அதிக அளவில் இறக்குமதி செய்து வருகின்றன என மும்பையைச் சேர்ந்த பூண்டு ஏற்றுமதியாளர் சைலேஷ் ஷா தெரிவித்தார்.

சர்வதேச சந்தையில், மலேசியா, இந்தோனேஷியா, பிலிப்பைன்ஸ் மற்றும் வங்காளதேசம் ஆகிய நாடுகளே மிக அதிக அளவில் பூண்டை வாங்கி வருகின்றன.

இந்தியாவில் ஆண்டுக்கு 10 லட்சம் டன் பூண்டு உற்பத்தி செய்யப்படுகிறது. இதில், பெரும் பகுதி உள்நாட்டு தேவைக்கே பயன்படுத்தப்படுகிறது. சென்ற 2009–10–ஆம் நிதி ஆண்டில், நம் நாட்டின் மொத்த பூண்டு ஏற்றுமதி 10,750 டன் அளவிற்கே இருந்தது. இந்த நிலையில், நடப்பு நிதி ஆண்டின் முதல் நான்கு மாதங்களிலேயே இந்த அளவை தாண்டி உள்ளது என்பது

குறிப்பிடத்தக்கது.

நம் நாட்டில், மத்தியபிரதேசம், உத்தரபிரதேசம் மற்றும் இமாச்சலபிரதேசம் ஆகிய மூன்று மாநிலங்களில்தான் பூண்டு அதிக அளவில் உற்பத்தியாகிறது. நம் நாட்டில், பூண்டு அறுவடை மார்ச் மாதத்தில் மேற்கொள்ளப்படுகிறது. அதேசமயம், சீனாவில் ஜூலை மாதத்தில் அறுவடை செய்யப்படுகிறது.

அறுவடை

உள்நாட்டில் பூண்டுக்கான தேவை அதிகரித்து வருகிறது. அதேசமயம், முந்தைய ஆண்டை விட இவ்வாண்டு பூண்டு உற்பத்தி குறையும் என்ற நிலைப்பாடும் உள்ளது. இதனால், இந்திய விவசாயிகள் முன்கூட்டியே பூண்டு அறுவடை மேற்கொள்வர் என எதிர்பார்க்கப்படுகிறது. உள்நாட்டில், ஒரு கிலோ பூண்டின் விலை ரூ.50 என்ற அளவில் இருந்தது. இது, அண்மைக் காலமாக (தரத்தை பொறுத்து) ரூ.75 முதல் ரூ.100 வரை விலை போகிறது.

## திருமூர்த்தி அணையில் இருந்து பி.ஏ.பி. 2–ம் மண்டல பாசனத்துக்கு தண்ணீர் திறப்பு 93 ஆயிரம் ஏக்கர் பாசன வசதி பெறும்



அணையில் இருந்து திறந்து விடப்பட்ட தண்ணீர், பி.ஏ.பி.வாய்க்காலில் சீறிப்பாய்ந்து செல்வதை படத்தில் காணலாம்.

உடுமலை, ஆக.28–

திருமூர்த்தி அணையில் இருந்து பி.ஏ.பி. 2–ம் மண்டல பாசனத்துக்கு அமைச்சர் மு.பெ.சாமிநாதன் நேற்று அதிகாலை தண்ணீர் திறந்து விட்டார். இதன் மூலம் 93 ஆயிரம் ஏக்கர் நிலம் பாசன வசதி பெறும்.

திட்டக்குழு ஆலோசனை கூட்டம்

உடுமலை அருகே உள்ள திருமூர்த்தி அணைக்கு பரம்பிக்குளம்–ஆழியாறு பாசன திட்டத்தின் கீழ் (பி.ஏ.பி) பரம்பிக்குளம் அணையில் இருந்து காண்டூர் கால்வாய் மூலம் தண்ணீர் கொண்டு வரப்பட்டு, பின்னர் அங்கிருந்து பாசனத்துக்கு தண்ணீர் திறந்து விடப்படுகிறது. இந்த பி.ஏ.பி. பாசன திட்டம் 4 மண்டலங்களாக பிரிக்கப்பட்டு 6 மாதத்துக்கு ஒரு மண்டலமாக

*கணக்கிடப்பட்டு உள்ளது.*

*இந்த 6 மாதத்திற்குள், 135 நாட்களை மண்டல பாசன காலமாகக்கொண்டு உரிய இடைவெளி விட்டு 90 நாட்களுக்கு தண்ணீர் வழங்கப்பட்டு வருகிறது. இந்த பி.ஏ.பி.பாசன திட்டத்தில் கோவை, திருப்பூர் மாவட்டங்களில் முதல் மண்டலத்தில் 94 ஆயிரத்து 446 ஏக்கர் நிலமும், 2–வது மண்டலத்தில் 92 ஆயிரத்து 806 ஏக்கர் நிலமும், 3–வது மண்டலத்தில் 96 ஆயிரத்து 980 ஏக்கர் நிலமும், 4–வது மண்டலத்தில் 92 ஆயிரத்து 920 ஏக்கர் நிலமும், ஆக மொத்தம் 3 லட்சத்து 77 ஆயிரத்து 152 ஏக்கர் நிலம் பாசன வசதி பெற்று வருகிறது. இதில் முதல் மண்டல பாசனத்திற்கான தண்ணீர் கடந்த ஜனவரி மாதம் 22–ந் தேதி திறந்து விடப்பட்டு ஜூன் மாதம் நிறைவடைந்தது.அதைத் தொடர்ந்து 2–வது மண்டல பாசனத்திற்கான தண்ணீர் திறப்பு குறித்து இந்த மாத தொடக்கத்தில் பொள்ளாச்சியில் உள்ள பொதுப்பணித்துறை அலுவலகத்தில் திருமூர்த்தி நீர்த்தேக்க திட்ட குழுவினருடன் ஆலோசனை நடத்தப்பட்டது. அப்போது 2–வது மண்டல பாசனத்திற்கு ஆகஸ்டு 27–ந் தேதி தண்ணீர் திறந்து விடுவது என்று முடிவு செய்யப்பட்டது.*

*அதைத் தொடர்ந்து, கோவை மற்றும் திருப்பூர் மாவட்டங்களில் உள்ள பரம்பிக்குளம் ஆழியாறு திட்ட பாலாறு படுகை 2–ம் மண்டல பாசன பகுதிகளுக்கு ஆகஸ்டு 27–ந் தேதி முதல் நாள் ஒன்றுக்கு 1,150 கன அடி வீதம் 135 நாட்களுக்குள் (பயிர்காலம்) உரிய இடைவெளி விட்டு 51 நாட்களுக்கு தண்ணீர் திறந்து விட தமிழக அரசு உத்தரவிட்டது.*

*அமைச்சர் சாமிநாதன்*

*அதன்படி தண்ணீர் திறந்து விடும் நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை பொதுப்பணித்துறை அதிகாரிகள் செய்தனர். தண்ணீர் திறப்பு நிகழ்ச்சியில் அமைச்சர் வெள்ளகோவில் மு.பெ.சாமிநாதன் கலந்து கொள்வதாக தெரிவிக்கப்பட்டது. இதற்கிடையே முதல்–அமைச்சர் கருணாநிதி தலைமையில் நேற்று சென்னையில் நடைபெற்ற கலெக்டர்கள் கூட்டத்தில் அமைச்சர் கலந்து கொள்ள வேண்டியிருந்ததால், அதற்கு ஏற்ப தண்ணீர் திறந்து விடப்படும் நேரம் காலை 6 மணி என்று மாற்றப்பட்டது.*

*தண்ணீர் திறப்பு நிகழ்ச்சிக்காக அமைச்சர் மு.பெ.சாமிநாதன் நேற்றுமுன்தினம் நள்ளிரவு திருமூர்த்திமலையில் உள்ள பொதுப்பணித்துறை விருந்தினர் மாளிகையில் தங்கினார்.*

*தண்ணீர் திறப்பு*

*நேற்று அதிகாலையில் திருமூர்த்தி அணையில் 2 இடங்களில் தண்ணீர் திறந்து விடப்படும் நிகழ்ச்சி நடந்தது. முதலில் தளி வாய்க்கால் பழைய ஆயக்கட்டு பாசனபகுதிக்கு காலை 5.50 மணிக்கு தண்ணீர் திறந்து விடப்பட்டது. தமிழக நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் வெள்ளகோவில் மு.பெ.சாமிநாதன் பொத்தானை அழுத்தி தண்ணீரை திறந்து விட்டார். இதன் மூலம் உடுமலை தாலுகாவில் ஏழு குளம் பாசனம் என்று அழைக்கப்படும் தினைக்குளம் மூலம் 248.80 ஏக்கரும், செட்டிகளும் மூலம் 260.48 ஏக்கரும், செங்குளம் மூலம் 283.27 ஏக்கரும், நேரடி பாசனம் மூலம் 130.31 ஏக்கரும், கரிசல்குளம் மூலம் 216.39 ஏக்கரும், அம்மாபட்டிக்குளம் மூலம் 196.07 ஏக்கரும், பெரிய குளம் மூலம் 1,167. 16 ஏக்கரும், ஒட்டுக்குளம் மூலம் 430.75 ஏக்கரும், வளைபாளையம் குளம் மூலம் 143.13 ஏக்கரும் மொத்தம் 3 ஆயிரத்து 76.36 ஏக்கர் நிலம் பாசன வசதி பெறும். இந்த தளி வாய்க்கால் பாசன*

பகுதிகளுக்கு திருமூர்த்தி அணையில் இருந்து நேற்று திறந்து விடப்பட்ட தண்ணீர், 2010–2011–ம் ஆண்டுக்கான தண்ணீர் ஆகும். தண்ணீர் உரிய இடைவெளியில் மொத்தம் 650 மில்லியன் கன அடி விடப்படும்.

2–ம் மண்டல பாசனம்

இந்த நிகழ்ச்சியை தொடர்ந்து பரம்பிக்குளம்–ஆழியாறு பாசன திட்டத்தில் (பி.ஏ.பி.) 2–ம் மண்டல பாசனத்துக்கான தண்ணீர் திறப்பு நிகழ்ச்சி காலை 6 மணிக்கு நடந்தது. அமைச்சர் வெள்ளகோவில் மு.பெ.சாமிநாதன் பொத்தானை அழுத்தி தண்ணீரை திறந்து விட்டார். இதன் மூலம் பி.ஏ.பி. 2–ம் மண்டல பாசனத்தில் கோவை மாவட்டம் பொள்ளாச்சி தாலுகாவில் 2 ஆயிரத்து 990 ஏக்கரும்( கோவை மாட்டத்தில் மொத்தம் 22 ஆயிரத்து 741 ஏக்கர்), திருப்பூர் மாவட்டம் உடுமலை தாலுகாவில் 12 ஆயிரத்து 645 ஏக்கரும், மடத்துக்குளம் தாலுகாவில் 6 ஆயிரத்து 150 ஏக்கரும், தாராபுரம் தாலுகாவில் 18 ஆயிரத்து 863 ஏக்கரும், பல்லடம் தாலுகாவில் 17 ஆயிரத்து 465 ஏக்கரும், திருப்பூர் தாலுகாவில் 7ஆயிரத்து 266 ஏக்கரும், காங்கயம் தாலுகாவில் 7 ஆயிரத்து 676 ஏக்கரும் ( திருப்பூர் மாவட்டத்தில் மொத்தம் 70 ஆயிரத்து 65 ஏக்கர்) என்று, இந்த 2 மாவட்டங்களிலும் சேர்த்து மொத்தம் 92 ஆயிரத்து 806 ஏக்கர் பாசன வசதி பெறும்.

இந்த தண்ணீர் தொடர்ந்து 17 நாட்களுக்கு விடப்படும். அதன் பிறகு 6 நாட்களுக்கு நிறுத்தப்பட்டு பின்னர் மீண்டும் திறக்கப்படும், இவ்வாறு தற்போதைய அரசாணைப்படி ஒரு சுற்றுக்கு 17 நாட்கள் வீதம் 3 சுற்றில் 51 நாட்களுக்கு தண்ணீர் விடப்படும்.

அணை நீர் மட்டம்

திருமூர்த்தி அணையின் மொத்த உயரம் 60 அடியாகும். மொத்த கொள்ளவு ஆயிரத்து 935 மில்லியன் கன அடியாகும். நேற்று காலையில் அணையின் நீர் மட்ட உயரம் 59.65 அடியாக இருந்தது. ஆயிரத்து 920 .98 மில்லியன் கன அடி தண்ணீர் இருந்தது. அணைக்கு வினாடிக்கு காண்டூர் கால்வாய் மூலம் 431 கன அடியும், பாலாற்றின் மூலம் 2 கன அடியுமாக மொத்தம் வினாடிக்கு 433 கன அடி தண்ணீர் வந்து கொண்டிருந்தது.

தண்ணீர் திறப்பு நிகழ்ச்சியில் திருப்பூர் மாவட்ட வருவாய் அதிகாரி (ஆர்.டி.ஓ) ஆர்.கஜலட்சுமி, உடுமலை ஆர்.டி.ஓ. எம்.சோமசேகரன், உடுமலை நகராட்சி தலைவர் செ.வேலுச்சாமி, பொதுப்பணித்துறை தலைமை பொறியாளர் ஜி.பஞ்சநாதன், கண்காணிப்பு பொறியாளர் கே.ரங்கநாதன், செயற்பொறியாளர்கள் கே.பன்னீர்செல்வம் (உடுமலை), பி.தங்கவேல் (பொள்ளாச்சி), சீனிவாசகம் (பரம்பிக்குளம்) உதவி செயற்பொறியாளர்கள் ஏ.கருணாகரன்(திருமூர்த்தி அணை), பி.சித்தார்த்தன் (மின் ), உடுமலை தாசில்தார் டி.சபாபதி, மடத்துக்குளம் ஊராட்சி ஒன்றியக்குழு தலைவர் வக்கீல் ஆர்.ஜெய ராம கிருஷ்ணன், குடிமங்கலம் ஊராட்சி ஒன்றியக்குழு துணைத் தலைவர் எஸ்.ராஜமாணிக்கம் மற்றும் தளி வாய்க்கால் பழைய ஆயக்கட்டு பாசன பகுதியைச் சேர்ந்த விவசாயிகள் கலந்து கொண்டனர்.

தலையங்கம்

தினத் தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்

28.8.2010 (சனிக்கிழமை)

# விவசாயிகளின் எதிர்பார்ப்பு

தற்போது, சென்னையில், மாவட்ட கலெக்டர்களின் மாநாடு நடந்துகொண்டு இருக்கிறது. எல்லா உயர் அதிகாரிகளும் இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டு இருக்கிறார்கள். இந்த நேரத்தில் பாராளுமன்றத்தில் நமது அதிகாரிகள் செய்யத்தவறிய அதிர்ச்சியான செயலை, மத்திய நீர்வளத்துறை மந்திரி தெரிவித்து உள்ளார். தண்ணீருக்காக ஏங்கிக்கொண்டிருக்கும் நமது விவசாயிகளுக்கு, இது பெரிய கோபத்தை அளித்து உள்ளது. தமிழ்நாட்டில், தாமிரபரணியைத்தவிர, இயற்கையான ஆற்று வளம் பெரிய அளவில் இல்லை. இது, நெல்லை மாவட்டத்தில் உற்பத்தியாகி, தூத்துக்குடி மாவட்டத்தில் கடலில் போய் கலக்கும் ஒரு பெரிய ஆறாகும். இந்த இரு மாவட்டங்கள் மட்டுமே, அண்டை மாநிலங்கள் நமக்கு தண்ணீர் தர வேண்டுமே என்று எதிர்பார்க்காத மாவட்டங்களாகும்.

இந்த நிலையில், மழை பெய்வதால் கிடைக்கும் ஒவ்வொரு சொட்டு தண்ணீரையும் பொன்போல காத்து, சேமித்துவைக்க வேண்டியது அவசியம் ஆகும். நீர்ப்பாசன திட்டங்களைப்பொருத்த மட்டில், மாநில அரசு உதவியோடும், மத்திய அரசின் உதவியோடும், உலக வங்கி நிதி உதவியை எதிர்பார்த்தும் நடத்தப்படுகின்றன. நமது அதிகாரிகள் எந்த திட்டத்திலும், தொய்வு ஏற்படவிட்டுவிடக்கூடாது. இந்த நிலையில், பாராளுமன்றத்தில் மத்திய அரசாங்கத்தின் நிதி உதவியோடு நடத்தப்படும் விரைவுபடுத்தப்பட்ட பாசன வசதித்திட்டம் தொடர்பான ஒரு கேள்விக்கு பதில் அளிக்கும்போது, ஆந்திர அரசாங்கம், இதன் அடிப்படையில், பல்வேறு நீர்பாசன திட்டங்களை செயல்படுத்துவதற்காக, 2 ஆயிரம் கோடி ரூபாயை மத்திய அரசிடமிருந்து பெற்று இருக்கிறது என்றும், தமிழ்நாடு வெறுமனே 20 கோடி ரூபாயை மட்டும்தான் பெற்றுள்ளது என்றும் மத்திய மந்திரி நீர்வளத்துறை மந்திரி பவன் குமார் பன்சல் தெரிவித்து இருக்கிறார்.

இது, விவசாயிகளுக்கு பெரிய அதிர்ச்சியை ஏற்படுத்தி இருக்கிறது. "நீங்கள் கருத்துருக்களை அனுப்பினால்தானே நாங்கள் நிதி ஒதுக்க முடியும்?" என்று மத்திய மந்திரி சொல்லியிருக்கிறார். எனவே, நமது அதிகாரிகள், இந்த திட்டத்தின் கீழ், ஆந்திராவைப்போல் அதிகபணம் வாங்காமல், என்ன செய்துகொண்டிருந்தார்கள்? என்ற ஆத்திரம் பொதுமக்களுக்கு ஏற்பட்டு உள்ளது.

எவ்வளவோ நீர்ப்பாசன திட்டங்களை எதிர்பார்த்து, நமது விவசாயிகள் ஏங்கிக்கொண்டிருக்கும் நிலையில், இந்த திட்டத்தின் கீழ் காவிரி ஆற்றை, அக்னியாறு, தெற்கு வெள்ளாறு, பாம்பாறு, கோட்டக்கரையாறு, வைகை மற்றும் குண்டாறுடன் இணைக்கும் திட்டம், கன்னடியன் கால்வாயில் இருந்து ஒரு புதிய வெள்ள நீர்க் கால்வாய் அமைத்து, சாத்தான்குளம் மற்றும் திசையன்விளை பகுதிகள் பயன்பட, தாமிரபரணியாற்றினை, கருமேனியாறு மற்றும் நம்பியாற்றுடன்இணைக்கும் திட்டம். திருவண்ணாமலை மாவட்டத்தில் உள்ள பெண்ணையாற்றினை, பாலாற்றுடன் இணைக்கும் திட்டம். மற்றும் நந்தன் வாய்க்காலுக்கு பாசன வசதி பெருக்குதலுக்கான திட்டம் ஆகிய திட்டங்களுக்காக மட்டும் நிதி உதவி கேட்டு தமிழக அரசு மத்திய அரசுக்கு அனுப்பி உள்ளது.

இப்போது, இந்த திட்டங்கள் எல்லாம் மத்திய நீர்க்குழுமத்தின் பரிசீலனையில் உள்ளது. நமது அதிகாரிகள் இதில் தீவிர கவனம் செலுத்தி உடனடியாக மத்திய அரசாங்கத்தின் விரைவுபடுத்தப்பட்ட பாசன திட்டத்தின் கீழ் கணிசமான அளவுக்கு நிதி உதவி பெற முயற்சி செய்ய வேண்டும். நமது மாவட்டகலெக்டர்களும் விழிப்போடு தங்கள் தங்கள் மாவட்டத்தில் மத்திய அரசின், உலக வங்கியின் நிதி உதவி பெற தகுதி உள்ள திட்டங்கள் எவை? எவை? என்பதை, தமிழக பொதுப்பணித்துறை செயலாளருடன் கலந்து ஆலோசித்து, துடிப்போடு, அரசுக்குத் திட்டங்களை அனுப்பிசெயல்பட வேண்டும். பொதுப்பணித்துறையும் இந்த திட்டங்களையெல்லாம் ஒருங்கிணைத்து, மத்திய அரசுக்கு அனுப்பி ஏராளமான திட்டங்களை நிறைவேற்ற நிதி உதவி பெற வேண்டும் என்பதே நமது விவசாயிகளின் எதிர்பார்ப்பு ஆகும்.